
## இப்பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோமா?





## சிறு வட்டத்தில் உள்ள எழுத்தில் முடியும்படி சொல் உருவாக்குக.




1. ____________
2. ____________
3 ____________
4. ____________
5. ____________
6 ____________

## படக்குறியீடுகளைக் கொண்டு சொற்களைக் கண்டுபிடிக்கலாமா?




1. .___கவலை___
2.____________
3.____________
4.____________
5____________
6.____________

## மீண்டும் மீண்டும் சொல்லலாமா?



கூவுற கோழி கொக்கரக் கோழி

கொக்கரக் கோழி கொழு கொழு கோழி

கொழு கொழு கோழி கொத்தற கோழி

தோணி மேலே கோணி

கோணி மேலே அணில்

அணில் கையில் கனி



## மொழியோடு விளையாடு

### சொற்களைக் கூறுவோம் கைகளைத் தட்டுவோம்



மாணவர்களை வட்டமாக நிற்கச் செய்க. உப்பு, உடை, உண்டியல், போன்று 'உ' எழுத்தில்தொடங்கும் சொற்களைக் கூறினால் மாணவர்கள்ஒருமுறைகையைத் தட்டவேண்டும். கழுதை, கடை, கண் போன்ற 'க' என்ற எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கூறினால் இருமுறை கையைத் தட்டவேண்டும். இவை அல்லாத சொற்களைக் கூறினால் கைகளைத் தட்டக்கூடாது. இவ்வாறு எழுத்துகளை மாற்றி விளையாடிப் பார்க்கலாம்.

### செயல் திட்டம்



எளிய கதைப்பாடல்களைத் தேடிப் படித்து வந்து வகுப்பில் கூறுக.

# 11 ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு




மரங்கள் இல்லாமல் குளிர்ச்சி இல்லையே ஒரே வெப்பமாக இருக்கிறதே
எனக்கும் எந்தக் கிழங்கும் காயும் கிடைக்க வில்லையே
பாலைவனத்தில் வேட்டைக்காரர்கள் வந்து விலங்குகளை வேட்டையாடுகின்றனர்.
ஐயோ! நாங்கள் எப்படி தப்பிப்பது?
வேட்டைக்காரர்கள் சில விலங்குகளை தூக்கிச்செல்கின்றனர்
மீதி விலங்குகள் ஒன்று கூடின
விலங்குகள் இல்லாத நேரத்தில் காட்டுக்குள் புகுந்த மனிதர்கள் மரங்களை வெட்டினர்
சிலர் மரங்களை வெட்டி எடுத்துச்சென்றனர்




திறன்: பண்புகளை வளர்த்தல்

**நீதிக் கருத்து : ஒற்றுமையே வலிமை**

## வாங்க பேசலாம்

- மரங்கள் விலங்குகளுக்கு மட்டுமல்ல, நமக்கும் பயன் தருகின்றன. எப்படி? உம் கருத்தை வெளிப்படுத்துக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. ஒத்துக்கொள்கிறோம் – இச்சொல்லின் பொருள் ................

(அ) விலகிக் கொள்கிறோம் (ஆ) ஏற்றுக் கொள்கிறோம்

(இ) காத்துக் கொள்கிறோம் (ஈ) நடந்து கொள்கிறோம்

2. வேட்டை+ ஆட – இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

(அ) வேட்டையட (ஆ) வேட்டையாட

(இ) வேட்டைஆடு (ஈ) வெட்டையாட

3. மரங்களிடையே – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..............................

(அ) மரம்+ இடையே (ஆ) மரங்கள்+இடையே

(இ) மரங்கள் + கிடையே (ஈ) மரங்கல் + இடையே

4. அங்குமிங்கும் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......................................

(அ) அங்கு + மிங்கும் (ஆ) அங்கும் + இங்கும்

(இ) அங்கு + இங்கும் (ஈ) அங்கும் + இங்கு

5. 'மரங்களுடன் இருந்தால் தப்பித்திருக்கலாம்' என்று கூறியது ..............................

(அ) சிங்கம் (ஆ) புலி

(இ) முயல் (ஈ) மான்

## வினாக்களுக்கு விடையளி

1. மரங்கள் எவற்றுடன் சண்டையிட்டன?
2. காட்டைவிட்டு எவை வெளியேறின?
3. விலங்குகளுக்கும் மரங்களுக்கும் போட்டிவரக் காரணம் யாது?
4. கதையின் மூலம் நீ அறிந்து கொண்டதை எழுதுக.

## புதிர்களைப் படித்து, விடையைக் கண்டறிக.

காட்டின் அரசன் ஆவான்; நெருப்பு போன்ற கண்கள் உடையவன்; முழக்கமிடுவான்– அவன் யார்?



கேரட் எனக்குப் பிடிக்கும்; தாவித் தாவி ஓடுவேன்; ஓடி ஓடி வந்தாலும் என்னைப் பிடிக்கமுடியாது – நான் யார்?



வேர்பிடித்து வளர்ந்திடுவேன்; தண்ணீரை உறிஞ்சிடுவேன்; மழைபெற உதவிடுவேன். – நான் யார்?




## எந்த மரத்திலிருந்து என்ன பொருள்? பொருத்துவோமா?



## குழுவில் சேராததை வட்டமிடுக.

1. மயில், கிளி, புறா, புலி, கோழி
2. ஆறு, ஏரி, குளம், மலை, குட்டை
3. தாயம், பல்லாங்குழி, கேரம், சதுரங்கம், கூடைப்பந்து
4. வெண்மை, கருமை, மென்மை, பசுமை, செம்மை
5. கத்தரி, வெண்டை, தக்காளி, தென்னை, மிளகாய்


## சொல் விளையாட்டு




1. ........................................ 2. ........................................ 3. ........................................

4. ........................................ 5. ........................................

# படம் பார்ப்போம்! பேசி மகிழ்வோம்!






பறவைகள், விலங்குகள், மரங்கள் ஆகியவற்றின் படங்களை வகுப்பின் எண்ணிக்கைக்கு ஏற்பத் தேர்ந்தெடுத்து அட்டைகளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். அந்த அட்டைகளை மேசையின் மேல் கவிழ்த்து வைக்கவேண்டும். வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவரையும் அழைத்து ஓர் அட்டையை எடுக்கச் செய்யவேண்டும். அந்த அட்டையில் என்ன படம் வருகிறதோ, அதனைப்பற்றி மூன்று தொடராவது பேசச் சொல்லவேண்டும். அவரை வகுப்பிலுள்ள மற்ற மாணவர்கள் பாராட்ட வேண்டும்.









## சிந்திக்கலாமா?

**விலங்குகளின் இருப்பிடம் காடுகள். காடுகளை அழித்து, அடுக்குமாடிகளும் தொழிற்சாலைகளும் கட்டினால், விலங்குகள் எங்குச் செல்லும்? உணவுக்கு என்ன செய்யும்? இதற்கென்ன தீர்வு?**

# 12 கல்வி கண் போன்றது

விரியூர் கிராமத்திலுள்ள பஞ்சாயத்து அலுவலகத்தில் அன்று கிராமசபைக் கூட்டம். வீட்டிற்கு ஒருவர் கூட்டத்தில் கட்டாயம் கலந்து கொள்ளவேண்டும் என்று தண்டோரா போட்டு அறிவிக்கப்பட்டிருந்தது. அறிவிப்பைக் கேட்ட பொன்வண்ணன், தம் கடையைப் பூட்டிவிட்டுக் கூட்டத்திற்குச் சென்றார்.

பஞ்சாயத்துத் தலைவர் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார். அரசின் சிறுதொழில் தொடங்குவதற்கான உதவித்தொகை வழங்கும் திட்டம் குறித்துப் பேசினார். இத்திட்டத்தின்கீழ் யார் யாருக்கெல்லாம் உதவித்தொகை வந்திருக்கிறதோ அவர்களின் பெயர்களைப் படித்தார்.

பொன்வண்ணன் தம்முடைய பெயர் வருகிறதா என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆனால், கடைசி வரை அவர் பெயர் வரவேயில்லை.




பொன்வண்ணன், தலைவரிடம் சென்றார். "ஐயா! எனக்கு ஏன் உதவித்தொகை இல்லை? நானும் பண வசதியில்லாமல் மிகவும் துன்பப்படுகிறேனே….." என்று கேட்டார்.

"யாருக்கெல்லாம் பண உதவி தேவையோ, அவர்களுக்கான கூட்டம் பற்றி உங்களுக்குத் அஞ்சல் மூலம் தெரிவித்து இருந்தோமே.! நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?" என்றார் தலைவர்.

"ஆமாம். போன வாரம் அஞ்சல்காரர் கொடுத்தார். படிக்கத் தெரியாததால் அப்படியே வைத்துவிட்டேன்".

"என்னப்பா! உனக்குத்தான் படிக்கத் தெரியல, ஆனா, உம்பையன்தான் பள்ளியிலே படிக்கிறானே, அது எப்படி தெரியாமல் போகும்?



பொன்வண்ணன் சற்றுக் குற்ற உணர்வோடு தலை குனிந்தபடி கூறினார், "ஐயா! நான்மிதிவண்டி பழுதுபார்க்கும்கடை வைத்திருக்கிறேன். எனக்கு உதவிசெய்வதற்காக,

அவனை அடிக்கடி பள்ளிக்கு விடுப்பு எடுக்கச் சொல்வேன். சில சமயங்களில் தொடர்ந்து பள்ளிக்குச் செல்ல இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதனால்தானோ என்னவோ அவனுக்குச் சரியாக எழுதவும் படிக்கவுமே தெரியாமலே போய்விட்டது. அவனுடைய ஆசிரியரும் இதைப்பற்றி என்னிடம் அடிக்கடி சொல்லி வருத்தப்படுவார். பள்ளிக்குத் தொடர்ந்து அனுப்புமாறு அறிவுரையும் கூறுவார். நான்தான் தப்பு செய்துவிட்டேன். என் மகனை இப்படிப் படிக்கத் தெரியாதவனாக ஆக்கிவிட்டேன்." என்று வருத்தத்துடன் கூறினார் பொன்வண்ணன்.

"உங்கள் அறியாமையால் இப்போது என்னவாயிற்று பார்த்தீர்களா? அரசின் உதவித் தொகையை உங்களால் பெற முடியாமல் போய்விட்டதே. கல்வி அறிவு இருந்தால்தான் நாள்தோறும் நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்ச்சிகளையும் அறிவியல் மாற்றங்களையும் அறிந்து கொள்ள முடியும். நம்மையும் மேம்படுத்திக் கொள்ள முடியும். கல்வி, தொழிலுக்கு வழிகாட்டுகிறது. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுகிறது. இப்போதாவது புரிந்து கொண்டீர்களா?

"ஐயா! இப்ப நான் நன்கு புரிந்து கொண்டேன். நான்தான் கல்வி கற்காமல் இருந்து விட்டேன். என் மகனாவது நன்கு படித்து வாழ்வில் முன்னேறட்டும். இனி நான் என் மகனை வேலைக்காகப் பள்ளியைவிட்டு நிறுத்த மாட்டேன். இப்போதே என் மகனை அழைத்துச் சென்று தலைமை ஆசிரியரிடம் மீண்டும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுமாறு நான் வேண்டிக்கொள்வேன்.

புரிந்து கொண்டால் சரிதான். உங்களுக்கு ஏற்பட்ட இந்த அனுபவத்தால நீங்க மட்டும் தெரிந்துகொண்டால் போதாது. நம் கிராமத்தினர் அனைவருமே அறியாமை நீங்கி, கல்வி குறித்த விழிப்புணர்வு பெறவேண்டும்.

கல்வியின் தேவையை எடுத்துக்கூறிய கிராம சபைத் தலைவருக்கு, நன்றி கூறிவிட்டு அங்கிருந்து சென்றார் பொன்வண்ணன்.



## வாங்க பேசலாம்

பேருந்தில் படிக்கத் தெரியாதவர் ஒருவர் ஊருக்குச் செல்கிறார். அவருக்கு ஏற்படும் சிக்கல்களைக் குழுவில் கலந்துரையாடுக.



## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. 'துன்பம்' – இச்சொல்லின் எதிர்ச்சொல் ..........................................

(அ) இன்பம் (ஆ) துயரம்
(இ) வருத்தம் (ஈ) கவலை

I3DU6Z

2. 'உதவித் தொகை' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........................................

(அ) உதவ + தொகை (ஆ) உதவிய + தொகை
(இ) உதவு + தொகை (ஈ) உதவி + தொகை

3. 'யாருக்கு + எல்லாம்' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..........................................

(அ) யாருக்கு எலாம் (ஆ) யாருக்குல்லாம்
(இ) யாருக்கல்லாம் (ஈ) யாருக்கெல்லாம்

4. வாழ்க்கையை நெறிப்படுத்த உதவுவது ..................

(அ) பணம் (ஆ) பொய்
(இ) தீமை (ஈ) கல்வி

5. 'தண்டோரா' என்பதன் பொருள் தராத சொல் ......................................

(அ) முரசுஅறிவித்தல் (ஆ) தெரிவித்தல்
(இ) கூறுதல் (ஈ) எழுதுதல்

### வினாக்களுக்கு விடையளி

1. 'தண்டோரா' மூலம் என்ன செய்தி அறிவிக்கப்பட்டது?

2. பஞ்சாயத்துத் தலைவர் கிராமசபைக் கூட்டத்தில் எதனைக் குறித்துப் பேசினார்?

3. பொன்வண்ணனுக்கு உதவித்தொகை ஏன் கிடைக்கவில்லை?

## அகர முதலியைப் பார்த்து பொருள் எழுதுக.

1. ஆவல் – ___________
2. தபால் – ___________
3. தண்டோரா – ___________
4. நெறிப்படுத்துதல் – ___________

## சரியான சொல்லால் நிரப்புக.

1. மக்கள் கிராமசபைக் கூட்டத்தில் _____________(களந்து/கலந்து) கொள்ள வேண்டும்.
2. கல்வி ____________ ( கன்/கண்) போன்றது.
3. நான்___________ (பளுதுபார்க்கும்/பழுதுபார்க்கும்) கடை வைத்திருக்கிறேன்.
4. ஆசிரியர், மாணவனை பள்ளிக்குப் தொடர்ந்து அனுப்புமாறு ____________ (அரிவுரை/அறிவுரை) கூறினார்.


## உன்னை அறிந்துகொள்

குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது சட்டப்படி குற்றமாகும். இதனை வலியுறுத்தும் விதமாக குழந்தைத்தொழிலாளர் ஒழிப்புநாள் ஆண்டுதோறும் ஜூன் 12 அன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

## சொல் விளையாட்டு

மயில் தோகையில் உள்ள எழுத்துகளைக் கொண்டு சொற்களை உருவாக்குக.


1. சுற்றம்
2. ___________
3. ___________
4. ___________
5. ___________
6. ___________





## பாடி மகிழ்வோம்



# உனக்குச் சரியானவற்றை எடுத்துக்கொண்டு உயர்ந்து செல்



## சிந்திக்கலாமா?

வளர்மதியும் பொன்மணியும் நல்ல தோழிகள். பொன்மணி சொற்களைத் தெளிவாகவும் அழகாகவும் எழுதுவாள். வளர்மதி சொற்களைத் தெளிவில்லாமல் எழுதுவாள்.

இதனைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ENPRYP


# 13 திருக்குறள் கதைகள்

## சரியான தீர்ப்பு

முன்பொரு காலத்தில் மரியாதைராமன் என்பவர் வாழ்ந்து வந்த ஊரில் வளவன் என்பவன் மளிகைக் கடை வைத்து வாணிகம் செய்து வந்தான்.

வளவன் பணம் ஈட்டுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவன். யாருக்கும் கொடுத்து உதவமாட்டான். அரசுக்கும் முறையாக வரி செலுத்துவதில்லை.

இந்நிலையில், மரியாதைராமன் அவ்வூரின் புதிய நீதிபதியாக நியமிக்கப்பட்டார். மரியாதைராமன் வளவனின் இளம்வயது நண்பன். அதனால், நீதிபதி தனது நண்பன் என, வளவன் ஊர் முழுவதும் கூறிவந்தான். முறையாக வரி செலுத்தாதவர்களின் பட்டியல் நீதிபதியிடம் ஒருநாள் வழங்கப்பட்டது. நீதிபதியின் ஆட்கள் வளவனை அழைத்துச் சென்றனர். நீதிபதி தனது நண்பனாயிற்றே, தனக்குத் தண்டனை தரமாட்டார் என எண்ணியவாறே மகிழ்ச்சியாகச் சென்றான் வளவன். வளவனின் நண்பன் என்பதால் மரியாதைராமனும் எப்படித் தீர்ப்பு வழங்குவாரோ என அவரது பண்பையும் நேர்மையையும் மக்கள் சந்தேகப்பட்டனர். ஆனால், மரியாதைராமன், நண்பனாக இருந்தாலும் தவறு செய்தவன் என்பதால், முறைப்படி அவனுடைய பொருள்களை அரசாங்கக் கருவூலத்தில் சேர்த்திடச் செய்தார். மேலும், வளவனுக்கு ஆறுமாதக் கடுங்கால் தண்டனையும் வழங்கி உத்தரவிட்டார்.



எவ்விதச் சார்பும் இன்றி நடுவு நிலைமையோடு தீர்ப்பு வழங்கிய மரியாதைராமனை அனைவரும் பாராட்டினர்.

### குறள்

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

நடுவுநிலைமை, குறள் 114

### விளக்கம்

ஒருவர் நடுவுநிலைமை உடையவர், இல்லாதவர் என்பது அவருக்குப்பின் நிலைத்து நிற்கும் புகழாலும் பழியாலும் அறியப்படும்.

## காலத்தே பயிர் செய்

முன்னொரு காலத்தில் மலைச்சாமி என்ற ஏழை விவசாயி, இலந்தைக்குட்டை என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்தான். அவனுக்கென்று சொந்தநிலம் ஏதும் கிடையாது. ஆனால், விவசாயம்தான் சோறு போடும் என்பதை ஆணித்தரமாக நம்பினான். அதே ஊரில் வசித்துவரும் மாதையன் என்ற செல்வந்தனின் நிலத்தைக் குத்தகைக்குக் கேட்டான். அச்செல்வந்தனும் சில நிபந்தனைகளுடன் தன் நிலத்தில் விவசாயம் செய்ய அனுமதிப்பதாகக் கூறினான். அதனை ஒப்புக்கொண்ட விவசாயி செல்வந்தனின் நிலத்தில் விவசாயம் செய்யத் தொடங்கினான். அச்செல்வந்தன் விவசாயியின் உழைப்பைச் சுரண்டுவதிலேயே குறிக்கோளாய் இருந்தான். இருந்தபோதிலும் மலைச்சாமி நேர்மையானவனாகவும், புத்திசாலியாகவும் இருந்ததால் செல்வந்தனிடம் ஏமாறவில்லை.



ஒருமுறை செல்வந்தன் விவசாயியிடம் குத்தகைக்கு ஈடாக "மண்ணுக்கு மேலே விளைபவை எனக்கு, மண்ணுக்குக் கீழே விளைபவை உனக்கு" என்று கட்டளையிட்டான். புத்திக்கூர்மையுடன் விவசாயி நிலக்கடலை பயிரிட்டதால் விவசாயிக்கே இலாபம் கிட்டியது. ஏமாற்றமடைந்த செல்வந்தன் அடுத்தமுறை விவசாயியை ஏமாற்ற எண்ணி நிபந்தனையை மாற்றினான். இம்முறை "மண்ணுக்குக் கீழே விளைபவை எனக்கு, மண்ணுக்கு மேலே விளைபவை உனக்கு" என்றான். ஆராய்ந்த விவசாயி இம்முறை நெல் பயிரிட்டான். இம்முறையும் விவசாயிக்கே இலாபம், ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான் செல்வந்தன். அதனால் எவ்விடத்து எதை, எப்படி, எக்காலத்தில் செய்ய வேண்டும் என்பதை அறிந்து செய்தால் உலகையே வென்று விடலாம்.

### குறள்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

காலமறிதல், குறள் 484

### விளக்கம்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து இடத்தோடு பொருந்துமாறு செய்தால் உலகமே வேண்டும் எனக் கருதினாலும் அது கைகூடும்



அழகிய ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் பறவைகளும் விலங்குகளும் வாழ்ந்து வந்தன. அங்கு இருந்த கரடி மட்டும் சேட்டைகள் பல செய்து வாழ்ந்தது. பறவையின் கூட்டை எட்டிப்பார்க்கும். குஞ்சுகள் என்றும் பாராமல் "இதோ உங்களைத் தூக்கி எறிகிறேன் பாருங்கள்" என்று பிய்த்து எறியும். குரங்குகள் வந்தால் தங்கவே இடம் தராமல் துரத்தி விட்டுவிடும். சில சமயங்களில் குட்டிக் குரங்குகளின் தலையில் குட்டு வைக்கும். அவை தலை வீங்கி அழுவதைப் பார்த்து சிரிக்கும். இவ்வாறு யாரிடமும் அன்பு காட்டாமல் வெறுப்புடனே நடந்து கொள்ளும். அதனால் பறவைகளும் குரங்குகளும் வேறு மரத்திற்கே சென்றுவிட்டன. ஒரு முறை வேடன் ஒருவன் விரித்து வைத்திருந்த வலையில் எதிர்பாராமல் கரடி சிக்கிக்கொண்டது. அது காடே அதிரும் வகையில் சத்தமிட்டு அலறியது. வேடன் விரித்த வலையிலிருந்து தன்னைக் காப்பாற்றும்படி கதறியது. ஆனால், ஒருவரையும் காணோம். தான் யாரிடமும் அன்பு காட்டாமல் இருந்ததுதான் இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை உணர்ந்து ஓவென அழுதது. இவ்வேளையில் கரடியின் சத்தம் கேட்டு வந்த பறவைகள், வேடனைக் கொத்திக் கொத்தித் துரத்தின. குரங்குகள் வலையைப் பிய்த்துக் காப்பாற்றின. அன்றுமுதல் கரடி எல்லாரிடமும் அன்பு செலுத்தத் தொடங்கியது.

### குறள்

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்

அன்புடைமை, குறள் 77

### விளக்கம்

எலும்பு இல்லாத உயிரை வெயில் காய்ந்து வருத்தும். அதுபோல அன்பு இல்லாத உயிர்களை அறம் வருத்தும்.

## கல்வியே நமது செல்வம்



ஓர் ஊரில் முத்தன் என்பவர் வாழ்ந்து வந்தார். சொந்தத் தொழிலில் ஈடுபட்டுக் கடினமாக உழைத்துச் செல்வந்தராக உயர்ந்தார். அவருக்குப் புகழினி, மதியழகன் என்ற இரண்டு பிள்ளைகள். பிள்ளைகள் இருவருக்கும் கல்விக்கு முதன்மை அளிக்காமல், தொழிலில் ஈடுபடுத்த எண்ணினார். ஆனால், தந்தையின் ஆலோசனையையும் மீறி கல்லூரி வரை இருவரும் படித்து முடித்தனர். முத்தனுக்குக் கல்வியின் மேல் பெரிய ஈடுபாடோ, விருப்பமோ கிடையாது. ஆகவே, சரியாகக் கல்வி கற்காத முத்தனை அவரது வியாபாரக் கூட்டாளிகள் ஏமாற்றி விட்டனர். இதனால் வீடு, வயல், ஆடுமாடுகள் எனச் செல்வத்தை இழந்து ஒருவேளை உணவுக்கே துன்பப்படும் நிலைக்கு அவரும் அவரது குடும்பத்தினரும் ஆளாகினர்.

முத்தனின் பிள்ளைகள் இருவரும் இனியும் தாமதிக்கக் கூடாது என எண்ணிப் பல நிறுவனங்களுக்கு வேலை வேண்டி விண்ணப்பித்தனர். உரிய கல்வித்தகுதி பெற்றிருந்ததால், இருவருக்கும் நல்ல வேலை கிடைத்தது.

சில நாள்களிலேயே குடும்பத்தின் வறுமை நீக்கப்பட்டது. முத்தன் கல்வியின் சிறப்பினை உணர்ந்து தமது கருத்தினை மாற்றிக்கொண்டார்.

### குறள்

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

கல்வி, குறள் 400

### விளக்கம்

ஒருவருடைய நிலைத்த செல்வம் என்பது அவர் கற்ற கல்வியே ஆகும். அதனைத் தவிர வேறு எந்த செல்வமும் நீடித்து இருக்காது.

## உண்மையான அணிகலன்கள்



முதியவர் ஒருவர் ஆலமரத்தடியில் அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். பக்கத்து ஊருக்குச் செல்வதற்காக அவ்வழியே செல்வந்தர் ஒருவர் வந்தார். அவர் அந்த முதியவரைப் பார்த்து, "என்னையா இவ்வழியே போனால் பருத்தியூர் போய்ச் சேரலாமா?" என்றார். ஓங்கிய குரலில் ஆணவத்துடன் அதற்கு அந்த முதியவர் எனக்குத் தெரியாது என்று பதிலளித்தார். முணுமுணுத்துக் கொண்டே அந்தச் செல்வந்தர் அவ்விடத்தைவிட்டு நகர்ந்தார். சற்றுநேரத்தில் மற்றொருவர் ஏராளமான ஆபரணங்கள் அணிந்துகொண்டு அங்கு வந்தார். அவர், "என்ன முதியவரே, இந்த வழியே யாரேனும் சற்றுநேரத்திற்கு முன் போனார்களா?" என்று கேட்டார். அதற்கு முதியவர் எனக்குத் தெரியாது என்று அமர்ந்தபடியே பதில் கூறினார். எனக்கு ஊரில் எவ்வளவு செல்வாக்கு உள்ளது தெரியுமா? நான் கேட்கும்போது எழுந்து பதில் கூறமாட்டாயா?" என்று முதியவரைக் கடிந்து கொண்டு சென்றார் அவர்.

மூன்றாவதாக இளைஞன் ஒருவன் அவ்வழியே வந்து முதியவரிடம் "ஐயா, வணக்கம். நான் வழி தவறி இங்கே வந்துவிட்டேன். எனக்குப் பருத்தியூர் செல்வதற்கு அருள்கூர்ந்து வழி கூறுங்கள்" என்றான். முதியவரும் உரிய வழியைக் கூறினார். "ஐயா, தங்களுக்கு ஏதேனும் உதவி வேண்டுமா?"என்று கேட்டான் அந்த இளைஞன். அதற்கு அந்த முதியவர் "வேண்டா என மறுத்துக் கூறினார். பின்னர், இதுவரை அங்கு நடந்ததைக் கூறி, "தம்பி, நாம் எவ்வளவுதான் செல்வச்செழிப்புடன் இருந்தாலும் பணிவுடைமையே நமக்குச் சிறந்த பண்பு"என்று கூறி, அந்த இளைஞனை வாழ்த்தி அனுப்பினார்.

### குறள்

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

இனியவை கூறல், குறள் 95

### விளக்கம்

பணிவு உடையவராகவும் இனிமையான சொற்கள் பேசுபவராகவும் இருப்பதே ஒருவருக்கு மிகச்சிறந்த அணிகலன். மற்றவையெல்லாம் உண்மையான அணிகலன்கள் ஆகா.

### ஆசிரியர் குறிப்பு

திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இயற்றிய இந்நூல், எக்காலத்துக்கும் ஏற்ற அறவுரைக் கருத்துகளைக் கொண்டுள்ளது. இந்நூலில் அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகள் உள்ளன. 133 அதிகாரங்களும் அதிகாரத்திற்குப் பத்துக் குறளென 1330 குறட்பாக்களும் உள்ளன. ஒவ்வொரு குறட்பாவும் ஈரடியால் ஆகிய வெண்பாவாகும்.



### வாங்க பேசலாம்

- உமக்குப் பிடித்த திருக்குறள் கதையை உமது சொந்த நடையில் கூறுக.

## படிப்போம் சிந்திப்போம் எழுதுவோம்

### சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

TA65S8

1. ஞாலம்– இச்சொல்லுடன் பொருந்தாத சொல் ......................................

(அ) உலகம் (ஆ) வையகம்

(இ) புவி (ஈ) மலை

2. கீழ்க்காணும் சொற்களுள் மாறுபட்ட பொருள் தருவது ......................................

(அ) அறம் (ஆ) தீமை

(இ) கொடை (ஈ) ஈகை

3. 'என்பு' இச்சொல்லிற்குப் பொருத்தமான சொல் ......................................

(அ) முகம் (ஆ) எலும்பு

(இ) கை (ஈ) கால்

4. 'நல்ல + செயல்' இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..................

(அ) நல்லசெயல் (ஆ) நல்செயல்

(இ) நற்செயல் (ஈ) நல்லச்செயல்

5. 'இன்சொல்' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ......................................

(அ) இனிமை + சொல் (ஆ) இன்+ சொல்

(இ) இன்மை + சொல் (ஈ) இனிமை+ செல்

## குறட்பாக்களில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக

_____________ _____________

_____________ _____________

## முறைமாறி உள்ள சீர்களை வரிசைப்படுத்தி எழுதுக

இன்சொலன் பணிவுடையன் ஒருவற்கு ஆதல்

பிற மற்றுப் அணியல்ல

________________________________

________________________________

தகவிலர் தக்கார் அவரவர் என்பது

படும் எச்சத்தாற் காணப்

________________________________

________________________________

## பாடி மகிழ்வோம்

கடலோரத்தில் அலை உருளுது பிரளுது

தத்தளிக்குது தாளம் போடுது.

கொக்கு நெட்ட கொக்கு

நெட்ட கொக்கு இட்ட

முட்ட கட்ட முட்ட

இலந்தப் பழத்திற்கு ஆசப்பட்ட கொழந்த

வாழப்பழம் தின்றது.

## குழு விளையாட்டு

ஞாலம் | அறம் | அணி | என்பு | கேடில் | எலும்பு | உலகம்

அணிகலன் | அழிவில்லாத | தருமம்

மேற்காணும் சொற்களை ஓர் அட்டையிலும் அவற்றிற்குரிய பொருள்களை வேறு அட்டையிலும் எழுதி வைத்துக் கொள்க. மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க. ஒரு குழு அட்டையில் எழுதிய சொற்களைக் கூற, மற்றொரு குழு அவற்றிற்குரிய சரியான பொருளைக் கூறவேண்டும்.

இதே போல் குழுக்களை மாற்றிச் சொற்களைக் கூறச்செய்து, அவற்றின் பொருளைக் கூறச்செய்க.

சரியாகச் செய்யும் குழுவைக் கைகளைத் தட்டி பாராட்டச் செய்க. இதுபோன்று தொடர்ந்து புதிய சொற்களை வைத்து விளையாடச் செய்க.



### செயல் திட்டம்

திருக்குறள் ஓலைச்சுவடி உருவாக்கி, அதில் பத்துக் குறள்களை எழுதி வருக.

# 14 வாலு போயி கத்தி வந்தது! டும் ... டும்.. டும் ... டும்

LH2WEA




யோவ் ! விறகு வெட்டி... கத்திய தர்றியா? இல்ல, விறகத் தர்றியா?
இந்தா... விறகை நீயே வச்சுக்கோ
ஆயா ! இந்த விறகை வச்சுக்கோ. எரிச்சு தோசை சுட்டுக்கோ...
பாருடா... எல்லா விறகயும் எரிச்சிட்டியா... நீ ?
இதப்பாரு ஆயா...... என் விறகைத் தர்றியா? இல்ல, தோசைய தர்றியா?
சரி ! சரி! இந்தா தோசைய எடுத்துக்கோ
மோர் விற்கும் பெண்ணே பசியா இருப்ப... இந்தா , தோசைய சாப்பிடு.
ஓ... நல்லா சாப்பிட்டியா !